FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097...

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 9/2018 | Date: நாள் 15.10.2018

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: As Amended by The Prevention of — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 10.10.2018 18.00 hrs — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2018 — Time நேரம் : 0800 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III — Time நேரம் : 0800 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — ஏழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 65 கி.மீ. தென் மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வட்டாட்சியர் குடியிருப்பு, விருத்தாசலம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P S -- District --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. செல்வம் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சுப்பரமணியன்,
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 38 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் — (g) Address : முகவரி தோப்புத் தெரு, சாத்துக்கூடல் மேல்பாதி & அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

குற்றம் சாட்டப்பட்டவர்கள் : 1. ஸ்ரீதரன், வட்டாட்சியர், விருத்தாசலம் தாலுக்கா,
2. கந்தசாமி, வட்டாட்சியரின் ஜீப் ஓட்டுனர், விருத்தாசலம் தாலுக்கா,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 15.10.2018 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு ஆய்வாளர் M.சதீஷ் ஆகிய நான் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது அலுவலகத்திற்கு வந்த கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தாலுக்கா, சாத்துகூடல் மேல்பாதி கிராமம், தோப்பு தெருவை சேர்ந்த சுப்பரமணியன் மகன் செல்வம் என்பவர் என்னிடம் கொடுத்த புகார் மனு பின்வருமாறு : அனுப்புநர் S.செல்வம், (வயது 38), த/பெ. 0சுப்பரமணியன், தோப்புத் தெரு, சாத்துக்கூடல் மேல்பாதி & அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, பெறுநர், ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கடலூர், அய்யா, நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக சுமார் 3 ஏக்கர் விளைநிலம் சாத்துக்கூடல் மேல்பாதி கிரமத்தில்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Selvam

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 15.10.2018

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.10.2018

Name: பெயர் M. Sathish
Rank: நிலை Inspector No. எண் ..........
CVD VGAC

உள்ளது. நான் சுமார் 2 மாதத்திற்கு முன்பு எனது சொந்த பட்டா நிலத்தில் உள்ள களிமண்ணை மணல் கலந்து மாற்றம் செய்து நிலத்தை சீரமைக்க எனது பட்டா நிலத்திலேயே சுமார் 3 மீட்டர் குழிதோண்டி அதில் கிடைக்கப்பெற்ற மணலை எடுத்து எனது நிலத்திலேயே கொட்டி வைத்திருக்கிறேன். ஏனெனில் மேற்படி மணலை நடவு நடும்போது களிமண்ணுடன் கலந்து நடவு செய்யலாம் என்பதற்காக நான் எடுத்த மணலை பயன்படுத்தாமல் வைத்துள்ளேன். ஆனால் மேற்படி மணலை வெளி நபர் யாருக்கும் விற்பனைக்காக கொடுக்கவில்லை. கடந்த 3.10.2018ம் தேதி நான் வீட்டில் இருக்கும்போது எங்க ஊர் மீனியல் செல்வராஜ் என்பவர் என்னை பார்த்து நீங்கள் அரசு விதிகளுக்கு புறம்பாக நிலத்தில் குழிதோண்டி மணல் எடுத்து விற்பனை செய்திருப்பதாகவும், மீதமுள்ள மணலை நிலத்திலேயே விற்பனைக்காக கொட்டி வைத்திருப்பதாகவும் கிடைத்த தகவலின்படி VAO ராஜலட்சுமி மற்றும் RI பிரகாஷ் ஆகியோர்கள் உன்மீது மணல் திருடியதாக புகார் கொடுத்துள்ளதாகவும், அதனடிப்படையில் கடந்த 2.10.2018ம் தேதி VAO ராஜலட்சுமி, RI பிரகாஷ், தாசில்தார் ஸ்ரீதரன் ஆகியோர்கள் என்னுடைய நிலத்தை பார்வையிட்டு போட்டோ எடுத்து சென்றுள்ளனர் என்றும், மேற்படி புகார் தொடர்பாக விருத்தாசலம் தாசில்தார் ஸ்ரீதரன் அவர்களை தாலுக்கா அலுவலகத்தில் சந்திக்குமாறு மீனியல் என்னிடம் கூறினார். பிறகு நான் பயந்துகொண்டு எனது அக்கா மகன் அசோக்கை அழைத்துக்கொண்டு 10.10.2018ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு தாசில்தார் அலுவலகத்தில் ஸ்ரீதரனை சந்திக்க சென்றபோது அலுவலக வாசலில் நின்றுகொண்டிருந்த தாசில்தார் ஸ்ரீதரனின் ஜீப் ஓட்டுனர் கந்தசாமி எங்களை பார்த்து என்னவென்று கேட்டார். நான் அவரிடம் நடந்தவற்றை சொல்லி விவசாயத்திற்காகத்தான் மணல் எடுத்தேன், விற்பனை எதுவும் செய்யவில்லை. தாசில்தார் அய்யா என்னை வரசொல்லியுள்ளார். அதற்காக நானும் எனது அக்கா மகனும் வந்துள்ளோம் என்று சொன்னேன். அப்போது தாசில்தார் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார். அச்சமயம் தாசில்தார் டிரைவர் அவரிடம் சென்று நாங்கள் வந்த விவரத்தை சொன்னபோது தாசில்தார் எங்களை பார்த்து “இன்று 6.00 மணிக்கு மேல் என்னுடைய குவாட்டர்ஸ்க்கு டிரைவர் கந்தசாமி மூலமாக வந்த பாருங்க” என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். பிறகு

நானும், எனது அக்கா மகனும் 10.10.2018ம் தேதி மாலை 6.00 மணிக்கு தாசில்தார் குவாட்டர்ஸ்க்கு சென்றபோது அங்கு தாசில்தார் டிரைவர் கந்தசாமி வீட்டின் வாசலில் ஜீப்புக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார். நானும், எனது அக்கா மகனும் சென்று அவரை பார்த்தோம். அப்போது கந்தசாமி "உங்கமீது தாசில்தார் பயங்கர கோவத்துல இருக்காரு, போலீஸ்ல சொல்லி உன்மீது வழக்கு போடப்போறாங்க" என்று சொன்னார். நானும் எனது அக்கா மகனும் அவரிடம் வழக்கு எதுவும் போடவேணாம். எங்கள பிரச்சனையில் இருந்து காப்பாத்தி விடுங்க என்று கெஞ்சினோம். அப்போது கந்தசாமி எங்களை பார்த்து நான் வீட்டுக்குள்ளே போய் தாசில்தாரை பார்த்து நீங்க வந்த விவரத்தை சொல்லி உதவி செய்ய முயற்சி செய்கிறேன் என்று சொல்லிவிட்டு டிரைவர் கந்தசாமி தாசில்தார் வீட்டுக் உள்ளே சென்று 10 நிமிடம் கழித்து வெளியே எங்களிடம் உங்களபத்தி நல்லவிதமா தாசில்தார்கிட்ட சொல்லிருக்கேன் உள்ளபோய் பாருங்க என்று எங்களை வீட்டின் உள்ளே அனுப்பி வைத்தார். நானும், எனது அக்கா மகனும் தாசில்தார் வீட்டின் உள்ளே சென்றபோது ஹாலில் தாசில்தார் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அப்போது அவர் என்னை பார்த்து "நீதான் சாத்துகூடல் செல்வமா, நீ 100 வண்டி உனது நிலத்திலிருந்து மணல் எடுத்து ஒரு மாதமாக விற்பனை செய்ததாக VAO என்னிடம் புகார் கொடுத்துள்ளார். அந்த புகார் இப்ப என்னிடம் இருக்கு" என்று கூறிவிட்டு அவரிடமிருந்த ஒரு பேப்பரை எடுத்து காட்டிவிட்டு என்னை பார்த்து "நீங்க 100 வண்டிக்கு மேல மணல் எடுத்துள்ளதால் அதற்கு ரூபாய் 30 லட்சத்திற்கு மேல் அபராதம் கட்டவேண்டியிருக்கும். அப்படி அபராதம் கட்டவில்லை என்றால் உன்மீது நான் காவல்நிலையத்தில் மணல் திருடியதாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ய நேரிடும். எல்லாம் ஜெயிலுக்கு போங்க" என்று மிரட்டினார். உடனே நான் அவரிடம் அய்யா மணல் எடுத்து விற்பனை செய்யவில்லை. நான் எடுத்த மணல் நிலத்திலேயதான் இருக்கு நீங்கவேனா வந்து பாருங்க என்று சொன்னேன். அதற்கு அவர் என்னை பார்த்து "நான் ஏற்கனவே உங்க நிலத்தை பார்த்துட்டேன். கண்டிப்பா போலிஸ்ல புகார் கொடுக்கப்போறேன்" என்று சொல்லிவிட்டு, நீங்க எடுத்த மணலுக்கு ரூ.30 லட்சம் அபராத தொகை கட்டனும், இல்லனா கேஸ்தான் போடனும் என்று சொன்னார். உடனே நான் அய்யா நான்

கூலி தொழிலாளி என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது என்று சொல்லிக்கொண்டே அவர் காலில் விழுந்தேன். பிறகு தாசில்தார் என்னை பார்த்து எனக்கு 2 லட்சம் பணம் கொடுங்க கேஸ் இல்லாம பாத்துக்குறேன் என்று சொன்னார். மீண்டும் நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது என்று சொன்னபோது அவர் கடைசியா ரூ.50000/- கொடுங்க என்று சொன்னார். பிறகு நான் அவரிடம் கொஞ்சம் குறைத்து சொல்லுங்க என்று கெஞ்சினேன். அப்போது அவர் என்னை பார்த்து 10000 குறைச்சிக்கிறேன் மீதி ரூ.40000 பணத்தை திங்கட்கிழமை எடுத்து இங்க வந்து டிரைவர் கந்தசாமி மூலமா என்னிடம் கொடுங்க என்று சொல்லி அனுப்பிவைத்தார். நாங்கள் தாசில்தார் வீட்டைவிட்டு வெளியே வந்தபோது டிரைவர் கந்தசாமி என்ன நடந்தது என்று கேட்டார். அவரிடம் நான் நடந்தவற்றை சொன்னேன். அப்போது கந்சாமி என்னை பார்த்து தாசில்தார் ஸ்ரீதரன் நேரடியாக பணத்தை எதுவும் வாங்கமாட்டார். நீங்க திங்கட்கிழமை இங்க வந்து என்னிடம் கொடுங்க நான் உள்ளபோய் தாசில்தாரிடம் கொடுத்துவிட்டு உங்க பிரச்சனையை முடிச்சி கொடுக்குறேன். பிறகு எனக்கு ஏதாவது தனியா செலவுக்கு பணம் கொடுங்க என்று சொல்லி எங்களை அனுப்பி வைத்தார். எனக்கும் என் அக்கா மகனுக்கும் தாசில்தார் ஸ்ரீதரன் மற்றும் டிரைவர் கந்தசாமி கேட்ட லஞ்ச தொகையை கொடுக்க விருப்பமில்லை. மேலும் மழை பெய்துகொண்டிருந்ததால் விவசாய வேலை இருந்தது. அதனால் உடனடியாக என்னால் புகார் கொடுக்க முடியவில்லை. ஆகவே நான் இன்று 15.10.2018ம் தேதி காலை உங்களிடம் புகார் கொடுக்குறேன். மேலும் தாசில்தார் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.40,000/-ம் கொண்டு வந்துள்ளேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, Sd/- S.Selvam, 15.10.2018. அய்யா நான் இன்று 15.10.2018 காலை 08.00 மணிக்கு நிலைய அலுவலலில் இருந்த போது வாதி செல்வம் ஆஜராகி கொடுத்த மேலே கண்ட புகாரை பெற்று, பின்னர் வாதி மற்றும் புகாரில் குறிப்பிட்டுள்ள குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றியும், புகாரின் உண்மை தன்மை பற்றியும் ரகசிய விசாரணை செய்ததில், வாதி கொடுத்த புகாரில் குற்றம் சாட்டப்பட்டுள்ள

அலுவலர்கள் மீது பிடிக்ககூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், இன்று 15.10.2018 காலை 09.30 மணிக்கு வாதி கொடுத்த புகாரின் மீது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.09/2018, U/s 7 Prevention of Corruption Act 1988, as Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் வாதி கொடுத்த உண்மை புகார் மனுவுடன் முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலையும் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.